கேள்வியில் சொல்லப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படும்பொழுது அங்கே கட்டப் படவிருக்கிற அந்தத் திட்டத்திற்குப் பாதகம் எதுவும் இருக்குமா? அப்படி பாதகம் எதுவும் இல்லாமல் அதைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்திலே இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

Surplus water from Kallanai Canal.

*168 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to utilise the surplus water of the Cauvery released from the Kallanai Canal in Thanjavur district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கல்லணைக் கால்வாயில் காவிரி ஆற்றின் உபரி நீர் செல்வதற்கு வழியில்லை. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, ஏராளமான தண்ணீர் வீணாகப் போவதன் காரணமாக நஷ்டம் ஏற்படுகிறதே அதுபற்றி பரிசிலனை செய்யப்பட்டதா? அதுபற்றி என்ன முடிவு செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கல்லணைக் கால்வாயில் நீர் வீணாகப் போவதில்லை. அதனுடைய கொள்ளளவிலே உள்ள தண்ணீரில் பாசனத்திற்குத் தேவையான தண்ணீர்தான் திறந்துவிடப்படுகிறது. தண்ணீர் வீணாகப் போகிறது என்ற கேள்வி எழவில்லை என்றுதான் சொன்னேன்.

பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனத் திட்டம்

*வினா 169—திரு. மு. பழனிசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தினை மேலும் விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எத்தனை ஏக்கர்களுக்கு எந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இதுபற்றிய செயற்குறிப்பு பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் தலைமைப் பொறியாளரின் தொடக்க நிலை ஆய்வில் உள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.